# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.1
# OS.NO.89/2019(C/w.112/2019, 100/2019)

**Name** : Chokkalaingam (89/2019)
**Father/Husband Name** : Veeraragavan

**Age** : 72

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.02.2026**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

விசாரணை தொடங்கிய நேரம் :12.50 P.M.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எந்த தேதியில் முதல்முதலில் ஜெயசங்கருக்கு பணம் கொடுத்தேன் என்றால் 2018. அதை எனக்கு வருமான வரியில் காட்டியிருக்கிறேன். தனித்தனி பெயரில் வராது மொத்தமாக தெரிவித்திருக்கிறேன். 2018–19 வருட வருமான வரி கணக்கில் காட்டியிருக்கிறேன். Loans and Advances தலைப்பில் காட்டியிருக்கிறேன். யார் யாருக்கு என்ன கொடுத்திருக்கிறேன் என்ற விவரம் அதில் இல்லை என்றால் சரியல்ல, ஆடிட்டர் மூலமாக அலுவலகத்தில் சமர்ப்பித்திருக்கிறேன். நான் சொல்வது தவறு என்றும் காட்பாடியில் வாங்கிய சொத்தையே மறைத்து வைத்துள்ளேன் என்றாலும், வருமான வரித்துறையில் வழக்கை விசாரித்தால்தான் உண்மை விவரம் தெரிய வரும் என்றால் சரியல்ல. அனைத்து விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

Advance Received என்ற தலைப்பின் கீழ் யாரிடமிருந்து பணம் பெற்றேன் என்ற விவரம் இல்லை என்றாலும், அதனை குறித்து கிரையம் எழுதிக்கொடுத்தது செல்லாதது, தவறு என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்கிறார் நம்பிக்கையின் அடிப்படையில் பணம் பெற்றுக்கொண்டு நிலத்தை அவர்களிடம் கொடுத்துவிட்டோம்.

உண்மையில் நான் சொத்தை விற்றிருந்தால் சர்வே எண் சொல்லியிருப்பேன் என்றாலும் உண்மையில் நான் விற்கவில்லை என்றால் சரியல்ல சர்வே எண் தெரியவில்லை என்று நான் சொல்லவில்லை, நினைவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன். இன்றைய தேதியிலாவது சர்வே எண் நினைவிருக்கிறதா என்றால் நினைவில்லை. வருமான வரியில சொல்லப்பட்டுள்ள IOB லோன் ஆறு மாதத்திற்குரியது அதை அவ்வப்போது புதுப்பித்துக்கொண்டேன். அவ்வாறு புதுப்பித்ததில் இந்த வருமான வரி கணக்கில் வருகிறதா என்றால் அந்த விவரங்கள் அதில் இருக்காது. அதை ஆடிட்டர் அலுவலகத்திற்கு கொடுத்திருக்கிறேன். (இந்த வழக்கிற்கு அது சம்பந்தமில்லாதது என்று வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.)

வருமான வரி கணக்கே இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றும், அதன் உண்மை விவரத்தை வருமான வரித்துறையில் வழக்கை விசாரித்தால்தான் தெரிய வரும் என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ள வருமான வரிக்கணக்கில் நகை கடனுக்காக IOB ல் செலுத்திய தொகை வராத நிலையில் இந்த வருமான வரி கணக்கு வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

எந்த ஒரு பண பரிவர்த்தனையும் 20 ஆயிரத்துக்கு மேல் சென்றால் செலுத்தக்கூடிய கடன் அனைத்தும் வருமான வரி கணக்கின்படி வங்கி மூலமாகத்தான் கொடுக்கல் வாங்கல் வைத்துக்கொள்ள வேண்டும் என்றால் அந்த காலக்கட்டத்தில் அவ்வாறு உள்ளது என்பது எனக்கு தெரியாது.

அவ்வாறு ஒரு சொத்து வாங்கினாலும் விற்பனை தொகையை வங்கி மூலமாகத்தான் செலுத்த வேண்டும் என்ற விதிமுறைகள் உள்ளது என்றால் வங்கி கணக்கு மூலமாகத்தான் செலுத்தி சொத்து வாங்கப்பட்டுள்ளது அந்த கணக்கும் வருமான வரியில் காட்டப்பட்டுள்ளது.

அவ்வாறு சென்னை சொத்துக்கு முழு பணத்தையும் செலுத்திய விவரம் வருமான வரிக்கணக்கில் காட்டப்படவில்லை என்றால் சரியல்ல, என்னுடைய பெயரில் பெறப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் வருமான வரிக்கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது.

நான் பணம் கொடுத்தாக உள்ள ஒவ்வொரு பாண்டும் எந்த ஒரு நபரும் வட்டி கொடுக்காதபட்சத்தில் இன்னொரு கடன் கொடுக்க மாட்டார்களா என்றால் சரியல்ல. ஒரு மாதம், இரண்டு மாதம், மூன்று மாதங்கள் போன்ற கால இடைவேளையில்தான் வட்டி கொடுக்கப்படுகிறது. என் மகன், மனைவி ஆகியவர்கள் பெயரில் ஏற்கனவே கொடுத்த கடனுக்கு வட்டி வராதபட்சத்தில் கடன் கொடு என்று சிபாரிசு செய்ய மாட்டார்கள் என்றால் சரியல்ல. நான், என் மனைவி, மகன் ஆகியவர்கள் கொடுக்கப்பட்ட கடன் ஒரு மாத கால இடைவெளியிலேயே கொடுக்கப்பட்டுள்ளது. நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

உண்மையில் நானும் என் குடும்பத்தாரும் லோன் கொடுத்திருந்தால் சென்னை சொத்துக்கு விற்பனை தொகை செலுத்தியிருந்தால் Insolvancy Petition ல் காட்டியிருப்பேன் என்றால் எனக்கு வரவேண்டிய பணத்திற்காக இந்த நீதிமன்றத்தில் உள்ள தொகைக்கு ஜப்தி போடப்பட்ட சென்னையில் உள்ள சொத்தை விற்பனை செய்துவிட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன். எனவே மகன், மனைவி ஆகியவர்களின் கணக்கை இந்த வழக்கில் காட்ட வேண்டியதில்லை. (IP சம்பந்தப்பட்ட கேள்வியை

கேட்க வாதி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது)

எனது அனைத்து கடனும் காட்டுவதுதான் IP என்னும்பட்சத்தில் நான் சொத்தை விற்று பணம் கொடுத்தேன் என்பதை காட்டாமல் அதே சொத்தை குறித்து IP போட்டது அவரை அவமானப்படுத்தும் நோக்கத்தில் போட்டுள்ளேன் என்றால் முற்றிலும் தவறானது. இதிலிருந்து நான் விற்பனை தொகையை கொடுக்கவில்லை என்பதும் இந்த பாண்டு முன்னிலைக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்பதும் தெரிகிறது என்றால் சரியல்ல தவறான தகவல்.

நான் கொடுத்ததாக சொல்லப்படும் பாண்டு பேப்பர்களில் எத்தனை ரூபாய் ஸ்டேம்ப் பேப்பர் என்றால் அதில் வருமான வரி முத்திரை ஒரு ரூபாய்க்கு ஒட்டடப்பட்டுள்ளது. உண்மையில் நான் பரிவர்த்தனை செய்திருந்தால் 2018 ல் தாவாவில் போடப்பட்டுள்ள கடன் உண்மை என்று அறியும்பட்சத்தில் நான் ஒன்றரை வருடம் கழித்து அறிவிப்பும், இரண்டு வருடம் கழித்து தாவாவும் போட வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

தாவாவில் குறிப்பிட்டுள்ள அனைத்தும் பாண்டுகளிலும் பிரதிவாதிகளில் கையொப்பம் இல்லை என்றாலும் அவர் பணம் எதுவும் பெறவில்லை என்றாலும் அவர்கள் பணம் செலுத்த வேண்டிய அவசியம இல்லை என்றாலும் இந்த தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. தாங்கள் கூறியது முற்றிலும் தவறான தகவல். எனக்கு கீழ் பணியாற்றிய அரசு ஊழியர்களை வைத்து இந்த பாண்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ஆனால் என்னுடன் பணிபுரிந்த ஒருசிலர் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளது உண்மை. ஆனால் மற்ற சாட்சிகளை அவரே கொண்டு வந்தார். நான் சொல்வது போல் எந்த சாட்சியையும அவர்

அழைத்து வரவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை அவர்தான் உண்மையில் அழைத்து வந்திருந்தால் தாவாவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

தவறான முறையில் தாவாவை தாக்கல் செய்து நட்பு முடிந்த பிரதிவாதியை மிரட்டும் வகையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு எந்த வியாஜ்ஜியமூலமும் ஏற்படவில்லை என்றாலும் இந்த வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றாலும் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் : 01.23 p.m.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI Date: 2026.02.07 17:59:20 -0100

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.